**இலங்கை மன்றம் - 2019**

-----------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் இலங்கை மன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மன்றத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் விசேட அதிகாரத்திற்கிணங்க கொடுக்கல் வாங்கல்கள் நிறைவேற்றப்பட்டது எனவும் பிரயோகிக்கக்கூடிய அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அனுமதிப்பதற்கும் அவசியமாக கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததும் எனவும் சொத்துக்களிற்கான கணக்களிப் பொறுப்பை பேணுவதற்கும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது விசேட அங்கீகாரத்திற்கு இணங்க மாத்திரம் சொத்துக்களை அணுகுவதை அனுமதிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ளவாறான சொத்துக்களுடன் நியாயமான இடைவெளிகளில் மற்றும் பொருத்தமான நடவடிக்கை ஏனைய வேறுபாடுகளுடன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டும் என்பவற்றையும் நியாயமாக உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்கீட்டு போதியளவு கட்டுப்பாடுகளிற்கு “திட்டமிடுதல் மற்றும் பராமரிப்பு” என்ற முறைமையொன்று நிறுவகத்திற்கு தேவைப்படுகின்றது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் ரூபா 65.36 மில்லியன் கிரயமான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுப்படுகின்றது. எனினும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் இதில் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆயுட் காலம் முடிவடைந்து தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற நிலையான சொத்துக்களை எதிர்காலத்தில் மீள்மதிப்பிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 2 மில்லியன் இணையதள வசதிகளுக்கான கட்டணம் மற்றும் மின்சாரபட்டியல் கட்டணம் என்பவற்றை பிற்போட்டரீதியில் சீராக்குவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் செலவினமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலுவை இணையதள வசதிகளுக்கான கட்டணம் 2019 ஆம் ஆண்டின் போது பகுதியாக செலுத்தியமை மற்றும் 2018 ஆம் ஆண்டில் நிலுவை மின்சாரப் பட்டியல் 2019 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறித்த காலப்பகுதிக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் கணக்குகளில் வைக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித கல்வி மற்றும் வியாபார அபிவிருத்தி பிரிவிற்கு கிடைக்க வேண்டிய கடன் ரீதியான ரூபா | சட்டரீதியான வழிமுறைகளை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளுக்காக | பொருத்தமான திட்ட முறைமையொன்றை தயாரித்து கடன் மீதியை |

| | | |
|---|---|---|
| 15.81 மில்லியன் தொகை ஒட்டுமொத்த கிடைக்கவேண்டிய கணக்குகளில் 63 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. அதில் 01 வருடத்திற்கும் 05 வருடத்திற்கும் இடையிலான நிலுவை மீதி ரூபா 2.92 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுப்பாட்டு சபையின் ஆலோசனையை பெற்றுக்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (அ) நிதிப்பிரமாணம் 156(7) | முற்பணத்தை பெற்றுக் கொள்ளும் போது சரியான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்படாதிருந்தமையால் 12 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 242,000 முற்பணத் தொகையில் 50 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் சேமிப்புக்கள் அதாவது ரூபா 215,550 தொகை மீண்டும் மீளச் செலுத்தி தீர்க்கப்பட்டிருந்தது. | முற்பணம் பெற்றுக் கொள்கின்ற சில உத்தியோகத்தர்களின் கைகளினால் ஏற்படுகின்ற இவ்வாறான குறைபாடுகளை மாற்றியமைப்பதற்காக தேவையான உள்ளக கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கு கணக்குகள் பிரிவு தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 761 | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,725,245 தொகையான கணனி துணைப் பாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன பொருட் பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை. | கணக்குகள் பிரிவினால் பராமரிக்கப்படுகின்ற நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ள தகவல்கள் சரியானது என உறுதிப்படுத்துகின்றோம். | கொள்வனவு செய்யப்பட்ட சகல சொத்துக்களும் பொருட்பதிவேட்டில் குறிப்பிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 9,370,945 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 34,683,516 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 25,312,571 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் மானியம் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 58,005,867 இனால் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எந்தவொரு தொழில்நுட்ப ஆய்வும் செய்யப்படாமல் மாதாந்த வாடகை ரூபா 87,500 தொகையான இணையதள தொடர்பு மாதாந்த வாடகை ரூபா 175,000 விரிவாக்கல் இணைப்பிற்கு மாற்றப்பட்டிருந்தது. இரண்டு மாதங்களான இவ்வாறான குறுகிய காலத்தில் இந்த தொடர்பினை பயன்படுத்துவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையால் அந்த காலத்திற்குரிய ரூபா 1,242,250 பட்டியல் கட்டணத்தை செலுத்துவதற்கு மன்றத்திற்கு ஏற்பட்டிருந்தது. | முன்னாள் தலைவர் அவ்வப்போது தீர்மானம் எடுத்து அமுல்படுத்தியமையினால் அந்த தொகையை செலுத்துவதற்கு நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ளது. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டதன் பின்னர் இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொலைக்காட்சி அலைவரிசையொன்றை ஆரம்பித்து நடாத்திச் செல்வதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 6.9 மில்லியன் கூட்டுமொத்தமாக செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 4 மில்லியன் வருமானமொன்று எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 190,000 தொகையான வருமானம் மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் புதிய வருமானத்தை உழைப்பதற்காக நாங்கள் கவனம் செலுத்தியிருந்ததுடன் தற்போது அதன் பெறுபேறுகளை அடையும் நிலையில் உள்ளது. | எதிர்பார்த்த பிரகாரம் வருமானத்தை உழைப்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட உயர் தேசிய டிப்ளோமா, சான்றுதழ் பத்திர பாடநெறி மற்றும் பல்வேறு செயலமர்வுகள் என 158 விடயங்களுக்காக நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட 14 விரிவுரையாளர்களிடமிருந்து மொத்த விரிவுரை பங்குபற்றல் 2923 மணித்தியாலமாக இருந்ததுடன் அந்த பாடநெறிகளுக்காக வெளிவாரி வளப் பங்களிப்பாளர்களின் விரிவுரை பங்குபற்றல் 8436 மணித்தியாலமாக காணப்பட்டது. நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட விரிவுரையாளர்களின் வருடாந்த சம்பளம் மற்றும் ஏனைய படிகள் ரூபா 16,407,816 ஆகவும் வெளிவாரி வளப் பங்களிப்பாளர்களுக்கு மீளாய்வாண்டிற்காக செலுத்தப்பட்ட படிகள் ரூபா 18,402,918 ஆக காணப்பட்டது. வெளிவாரி வளப் பங்களிப்பாளர்களின் விரிவுரை மணித்தியாலம் ஒன்றின் பெறுமதி ரூபா 2,181 ஆகவும் உள்ளக விரிவுரையாளர்களின் விரிவுரை மணித்தியாலம் ஒன்றின் பெறுமதி ரூபா 5,613 ஆகவும் காணப்பட்டன. | உள்ளக விரிவுரையாளர்களின் சம்பளம் தொடர்பாக கணக்காய்வின் போது நிறுவனத்திற்கு காண்பிக்கப்பட்ட ஒட்டுமொத்த பங்களிப்பையும் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம். | விரிவுரையாளர்களின் செயலாற்றல் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு உத்தேசிக்கப்பட்ட கலையரங்கம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ஆலோசனைச் சேவைகளை பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தத்திற்காக ரூபா 1,049,124 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மதியுரையாளர்களை | இலங்கை மன்றத்தின் முகாமைத்துவம் எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் நிதி பிரச்சினைகளின் அடிப்படையில் இந்த கலையரங்கம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் திட்டங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தெரிவுசெய்தல் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.2, 3.3, 3.4 மற்றும் 9.2.1 வழிகாட்டிகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. முகாமைத்துவம் எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் நிதிப் பிரச்சினைகளின் அடிப்படையில் இந்த கலையரங்கத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டு நிறுத்தப்பட்டமையினால் செலவிடப்பட்ட மதியுரைக் கட்டணம் பயனற்ற செலவினமாக இருந்தது. | | |

### 3.5 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மன்றத்திற்கு சொந்தமான சுதந்திர மாவத்தையில் அமைந்துள்ள காணியின் பெறுமதியை உள்ளடக்கிய ரூபா 5,283,015 கிரயமான கட்டிடத்தில் எழுத்து மூல உடன்படிக்கையின்றி வெளித்தரப்பினருக்கு எவ்வித வாடகையும் அறவிடப்படாமல் வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த நிலைமையை முறைமைப்படுத்திக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் கட்டுப்பாட்டு சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எங்களால் பல தடவைகள் இந்த ஆதனத்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் அதனை கையேற்பதற்கு முடியாதுள்ளது. | வெளித்தரப்பினரினால் பயன்படுத்தப்படுகின்ற ஆதனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஸ்ட முகாமைத்துவ நிலையில் 5 பதவிகளில் 2 வெற்றிடமாகக் காணப்பட்டமையானது நிர்வாக நடவடிக்கைகள் | வெற்றிடமாகக் காணப்படுகின்ற சிரேஸ்ட நிலையின் பதவிகளை நிரப்பும் போது ஏற்படுகின்ற நிதிப் பிரச்சினை நிலைமைக்கு தீர்வாக தற்போது நிறுவனத்தில் இருக்கின்ற அது மற்றும் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| தொடர்பில் பாதகமான தாக்கதை ஏற்படுத்தகூடியதாக இருக்கின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்ட்டது. | அதற்குச் சமமான சிரேஸ்ட நிலையின் உத்தியோகத்தர்கள் ஊடாக உரிய பணிகளை நிறைவேற்ற வேண்டி ஏற்பட்டுள்ளது. |